
பாடம் - 30

# தேவனுடைய தெய்வீகத் திட்டம்

மனுக்குலத்திற்கான காலக் கடிகாரம்

# வேதாகம காலக்கணக்கு






# BIBLE CHRONOLOGY

For Further Details : Email us : baskar_harvest@yahoo.co.in, baskarharvest@gmail.com
Phone : 97886 19229, 93641 50005

## தேவனுடைய தெய்வீகத்திட்டம்

# வேதாகம காலக்கணக்கு



கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இன்று நாம் வேதாகமத்தில் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்த காலங்களைக் குறித்து காண்போம்.

காலக்கணக்கு என்பதற்கான ஆங்கிலச் சொல் க்ரோனாலஜி (Chronology)ஆகும். நாம் பயன்படுத்தும் கைக்கடிகாரமானது அறிவியல் ரீதியாக "காலத்தை அளக்கும் கருவி"(Chronometer) என்று அழைக்கப்படுகிறது.

***காலத்தை அளக்கும் கருவி (Chronometer)***




க்ரோனாலஜி(Chronology) என்ற இந்த வார்த்தை இரண்டு பாகங்களைக் கொண்டது.

1. **"க்ரோனாஸ்"** - இதற்கு "காலம்(Time)" என்று பொருள்
2. **"லோகாஸ்"** - இதற்கு "ஆராய்தல்(Study)" என்று பொருள்

**இவ்வாறு க்ரோனாலஜி என்பதற்கு "காலத்தைக் குறித்து ஆராய்தல்" என்று பொருள்படும். வேதாகம காலக்கணக்கு என்பது, வேதத்தில் கூறப்பட்டுள்ள மனிதனுடைய வரலாற்றில் உள்ள காலத்தை ஆராய்வதாகும்.**

☞ இன்று கிறிஸ்து பிறந்த பின்(கிபி) 2000க்கும் மேற்பட்ட வருடங்கள் ஆகிவிட்டதை


அறிவோம். ஆனால் கிறிஸ்து பிறப்பதற்கு முன்(கிமு) எத்தனை வருடங்கள் கழிந்திருக்கிறது என நாம் அறிந்திருக்கிறோமா?


☞ மேலும் இந்த பூமியில் மனிதனுடைய வரலாறு எத்தனை ஆண்டுகளுக்குமுன் தொடங்கியது? எத்தனை வருடங்கள் கடந்திருக்கிறது? என்று அறிவோமா?

☞ இதைக் குறித்து விஞ்ஞானிகள்- இந்த உலகில் மனித இனம் தோன்றி பல இலட்ச வருடங்கள் ஆகிவிட்டது என்றும், வேறு சிலரோ பல ஆயிர வருடங்கள் என்றும் வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். ஆனால் இதில் உண்மை என்ன? வேதாகமம் இதுபற்றி வெளிப்படுத்துகிறதா?

☞ ஆம்! கர்த்தருடைய புஸ்தகத்தில் தேடும்பொழுது, இங்கே கொஞ்சமும், அங்கே கொஞ்சமுமாக, 50 தொடர்புகளுடைய வசனங்கள், 7 பாகங்களாக சிதறியிருப்பதை நாம் காண்கிறோம்.

இப்பொழுது வேதாகம காலக்கணக்கு குறித்த ஆராய்ச்சியைத் தொடங்குவோம்.





## பாகம் - 1

### ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டது முதல் ஜலப்பிரளயம் வரை

தேவனுடைய தெய்வீகத் திட்டத்தில், முதலாம் உலகத்தின் காலப்பகுதியே இந்த பாகம். ஆதியாகமம் ஐந்தாம் அதிகாரத்தில் இக்காலப்பகுதி குறித்த துல்லியமான கணக்கீட்டை தேவன் நமக்குத் தந்துள்ளார்.

இந்த காலப்பகுதியை எவ்வாறு கணக்கிடமுடியும்?

☞ ஆதாமின் சந்ததியாகிய சேத் துவங்கி, அவன் சந்ததியில் வந்த 10 நபர்களின் வயதை ஒட்டுமொத்தமாகக் கூட்டினால் கணக்கீடு சரியாக இருக்குமா?

அப்படிச்செய்தால் ஒரு பெரிய கூட்டுத்தொகை வரும். அது ஒரே காலத்தில் வாழ்ந்தவர்களின் பின்னிப்பிணைந்த வருடங்களை நமக்குத் தரக்கூடும். இது எதிர்பார்த்ததைக் காட்டிலும் இரண்டு அல்லது மூன்றுமடங்கு பெரியதாகும்.(பக்கம் 14இல் கொடுக்கப்பட்டுள்ள முதலாம் உலகத்தின் வம்ச வரலாறு அட்டவணையைப் பார்க்கவும்)

☞ உதாரணமாக, ஆதாம் 325 வயதாயிருக்கும்போது, அவருடைய கொள்ளுப்பேரனாகிய கானான் பிறந்தார். ஆனால் அவருடைய 325 வயது வரையிலான காலப்பகுதியில், தன்னுடைய குமாரன் சேத்துடன்195 வருடங்களும், பேரன் ஏனோசுடன்90 வருடங்களும் வாழ்ந்திருந்தார்.

இப்படி, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில், இம்மூவரது வாழ்நாட்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருந்ததைக் காண்கிறோம். ஆகையால் உண்மையான 325வருட கால அளவிற்கு பதிலாக, இம் மூவருடைய வயதையும் கூட்டும்பொழுது,

☞ *325(ஆதாம்) + 195(சேத்) + 90(ஏனோஸ்) = கூட்டுத்தொகை 610 வருடங்களாகும்*

ஆனால் உண்மையில் கடந்துவந்த காலங்கள் 325 வருடங்கள் மட்டுமே. இது போன்ற சூழ்நிலையே, ஆதாம் முதல் நோவா வரையிலான 10 நபர்களின் வயதைக் கூட்டும்பொழுது ஏற்படும்.

இவ்வாறிருக்க, சரியாக காலங்களை கணக்கிட நாம் செய்யவேண்டியது என்னவெனில்,

☞ ஆதாம் முதல் நோவா வரையில் ஒவ்வொருவரும் தன்னுடைய முதல் குமாரனை பெற்றிருக்கும் வரையில் வாழ்ந்த வயதின் வருடங்களை மாத்திரம் கூட்டவேண்டும். இதன்மூலம் நோவாவின் பிறப்பு வரையிலான 9 சந்ததிகளின் சங்கிலித்தொடரை நாம் பெறுவோம்.


☞ இந்தக் கூட்டுத்தொகையோடு, ஜலப்பிரளயத்தின்போது நோவா எட்டியிருந்த வயதைக் கூட்டவேண்டும். அப்படிக் கூட்டினால், ஆதாமின் சிருஷ்டிப்பிலிருந்து ஜலப்பிரளயம் துவங்கின நாள் வரையிலான வருடங்களின் எண்ணிக்கையை நாம் பெறலாம். இது மிகவும் சுலபமானது.


இவ்வாறு நாம் கணக்கிடுகையில், பின்வரும் விடையைப் பெறுகிறோம்.

| வேத வசனம் | வயது | முதற் பிறந்தவர்கள் |
|---|---|---|
| ஆதியாகமம் 5:3(ஆதாம்) | 130 | சேத் |
| ஆதியாகமம் 5:6(சேத்) | 105 | ஏனோஸ் |
| ஆதியாகமம் 5:9(ஏனோஸ்) | 90 | கேனான் |
| ஆதியாகமம் 5:12(கேனான்) | 70 | மகாலாலெயேல் |
| ஆதியாகமம் 5:18(மகாலாலெயேல்) | 65 | யாரேத் |
| ஆதியாகமம் 5:21(யாரேத்) | 162 | ஏனோக்கு |
| ஆதியாகமம் 5:25(ஏனோக்கு) | 65 | மெத்துசாலா |
| ஆதியாகமம் 5:25(மெத்தூசாலா) | 187 | லாமேக்கு |
| ஆதியாகமம் 5:28(லாமேக்கு) | 182 | நோவா *(ஜலப்பிரள- -யத்தின்போது அவருடைய வயது)* |
| ஆதியாகமம் 7:11(நோவா) | 600+ | |
| **மொத்தம்** | **1656** | |

**முதலாம் உலகத்தின் கால அளவு = 1656 வருடங்கள்.**







**பாகம் - 2**

## ஜலப்பிரளயம் முதல் வாக்குத்தத்தம் வரை

ஜலப்பிரளயம் துவங்கின நாள் முதல்,"வாக்குத்தத்தம்" வரை நீடிக்கும் காலப்பகுதியாகும். இங்கு குறிப்பிடப்படுகிற வாக்குத்தத்தம் எது?

மோரியா மலையில் ஈசாக்கை பலியிடப்போனபோது தேவன் ஆபிரகாமிடம் பண்ணின வாக்குத்தத்தம் அல்ல, மாறாக, அதற்கு முன்பு, கல்தேய பட்டணமாகிய "ஊரில்" இருந்தபோது, தேவன் ஆபிரகாமுடன் செய்த வாக்குத்தத்தமாகும். இந்த வாக்குத்தத்தம் பற்றி வசனத்தில் வாசிக்கலாம்.

**ஆதியாகமம் 12: 1-3**

***"கர்த்தர் ஆபிராமை நோக்கி - நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ, நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்"***

ஆபிரகாம் இந்த நிபந்தனைக்கு கீழ்ப்படிந்து, நிறைவேற்றியதால் பெறப்போகும் மிகப்பெரிய ஆசீர்வாதமாகிய வாக்குத்தத்தம் இதுவேயாகும்.

☞ இவ்வாறு கர்த்தர் பேசினபடியே ஆபிரகாம் தன் தேசத்தைவிட்டு, புறப்பட்ட அந்த நாளே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டநாளாயிற்று

**ஆதியாகமம் 12:4**

***"கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான். லோத்தும் அவனோடே கூடப்போனான். ஆபிராம் ஆரானைவிட்டுப் புறப்பட்டபோது, எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருந்தான்"***

அந் நேரத்தில்ஆபிரகாமுக்கு வயது எழுபத்தைந்து. இது அவருடைய தகப்பன் தேராகு மரித்தபிறகு சில நாட்களில் நடந்தது என்று வாசிக்கிறோம் -

**அப்போஸ்தலர் 7:4**


***"அப்பொழுது அவன் கல்தேயர் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, காரானூரிலே வாசம் பண்ணினான். அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தைவிட்டு நீங்கள் இப்பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்கு அவனைஅழைத்துக்கொண்டு வந்து குடியிருக்கும்படி செய்தார்"***


ஆகையால் இந்த பாகமானது தேராகுவினுடைய மரணம்வரை கணக்கிடப்படுகிறது. ஏனெனில்

இது ஆபிரகாம் தன் ஜனத்தையும் தேசத்தையும் விட்டு வெளியேறி, வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொண்ட நாள். வேதாகமக் காலக்கணக்கில் இந்த பாகம் கணக்கிடப்படுவது ஆதியாகமம் 11ம் அதிகாரத்தில் உள்ளது.

| வேத வசனம் | வயது | முதற் பிறந்தவர்கள் |
|---|---|---|
| ஆதியாகமம்11:10(ஜலப்பிரளயத்திற்கு பின்பு) | 2 | அர்பக்சாத் |
| ஆதியாகமம் 11:12(அர்பக்சாத்) | 35 | சாலா |
| ஆதியாகமம் 11:14(சாலா) | 30 | ஏபேர் |
| ஆதியாகமம் 11:16(ஏபேர்) | 34 | பேலேகு |
| ஆதியாகமம் 11:18(பேலேகு) | 30 | ரெகூ |
| ஆதியாகமம் 11:20(ரெகூ) | 32 | செருக் |
| ஆதியாகமம் 11:22(செருக்) | 30 | நாகோர் |
| ஆதியாகமம் 11:24(நாகோர்) | 29 | தேராகு |
| ஆதியாகமம் 11:32(தேராகின் ஆயுசுநாட்கள்) | 205+ | மரணம் |
| மொத்தம் | 427 | |

**ஜலப்பிரளயம் முதல் வாக்குத்தத்தம் வரையிலான கால அளவு 427வருடங்கள்**





## பாகம்- 3

## வாக்குத்தத்தம் முதல் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது வரை

காலக்கணக்கில் இந்த பாகமானது, ஆபிராம் தன் தகப்பனுடைய மரணத்தின்போது வீட்டைவிட்டு வெளியேறினது துவங்கி, நியாயப்பிரமாணம் கொடுக்கும் காலம்வரை தொடர்கிறது.

இந்த பாகங்களுக்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்படாமல் தொடர்வதை கவனிக்கவும்.

☞ நியாயப்பிரமாணம் எப்போது கொடுக்கப்பட்டது?

அநேகர் சீனாய் மலையில் மோசே10கட்டளைகளைப் பெற்ற சமயத்தில் என்று

நினைக்கின்றனர். இது உண்மையல்ல. இஸ்ரயேலர் எகிப்தில் உள்ள ராமசேசை விட்டு வெளியேறினதற்கு முந்தின இரவு, அவர்களுக்கு முதலாவதாக நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. இதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**யாத்திராகமம் 12: 41-42**

***"நானூற்று முப்பது வருஷம் முடிந்த அன்றைய தினமே கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டது. கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினதால், இது அவருக்கென்று முக்கியமாய் ஆசரிக்கத்தக்க ராத்திரியாயிற்று. இஸ்ரயேல் சந்ததியார் எல்லாரும் தங்கள் தலைமுறைதோறும் கர்த்தருக்கு முக்கியமாய் ஆசரிக்கவேண்டிய ராத்திரி இதுவே"***

இது பஸ்காவை நியமித்தது பற்றிய நியாயப்பிரமாணமாகும். இதுவே தேவன் இஸ்ரயேலர்க்குக் கொடுத்த முதல் நியாயப்பிரமாணமாகும்.

☞ இக்காலப்பகுதி எதுவரை நீடித்திருந்தது? இதற்கான பதிலை நாம் புதிய ஏற்பாட்டில் காண்கிறோம் -

**கலாத்தியர் 3:17**

***"ஆதலால் நான் சொல்லுகிறதென்னவெனில், கிறிஸ்துவை முன்னிட்டு தேவனால் முன் உறுதி பண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்று முப்பது வருஷத்திற்குப் பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது"***

இந்த வசனம்- வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டதற்கும், நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதற்கும் இடையே உள்ள காலப்பகுதி 430 வருடங்கள் என தெளிவாக காண்பிக்கிறது.

இந்த எண்ணிக்கையை வேறொரு முறையிலும் பெறலாம். இதை பின்வரும் வசனத்தில் காண்கிறோம் -

**யாத்திராகமம் 12:40**

***"இஸ்ரயேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்தகாலம் நானூற்று முப்பது வருஷம்"***

இது எப்படி சாத்தியமாகும்?


யாக்கோபு எகிப்திற்கு வந்தபோது அவரோடு எழுபது பேர் இருந்ததாக வாசிக்கிறோம் (ஆதியாகமம் 46:27). இப்படியிருக்க, லேவி - கோகாத் - அம்ராம் - மோசே(1நாளாகமம் 6:1-3) ஆகிய மூன்று சந்ததிகளுக்குள்ளாக 430வருடம் கடந்திருப்பது சாத்தியமா? இந்த வசனத்தை ஆங்கிலத்தில் படித்தபிறகே அதில் குறிப்பிடப்பட்டிருக்கிற இஸ்ரயேலர்களின் நாடோடி வாழ்க்கையானது யாக்கோபு மற்றும் குடும்பத்தார், இஸ்ரயேலில் கால்பதித்ததில் துவங்காமல்,ஆபிராம் முதன்முதலாக தன்னுடைய தேசத்தை விட்டு வெளியேறி எகிப்திற்குள் நுழைந்தபொழுது துவங்கினதை நாம் உணர்கிறோம். இதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**ஆதியாகமம் 12:10**

*"அத்தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று. தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருந்தபடியால், ஆபிராம் எகிப்துதேசத்திலே தங்கும்படி அவ்விடத்துக்குப் போனான்"*

இவ்விதமாக இஸ்ரயேலர்கள் ஆபிரகாம் எகிப்து தேசத்தில் நுழைந்தபோது, அவருடைய அரையில் இருந்ததன்மூலம் இந்த 430வருட கணக்கிடுதல் சாத்தியமாகிறது. ஏனென்றால் ஆபிரகாமுக்கு உள்ளாகவும், அவர்மூலமாகவும் மாத்திரமே இஸ்ரயேல் புத்திரர் தேவனுக்கு முன்பாக நிலைநிற்கின்றனர்.

இவ்வாறு வாக்குத்தத்தம் துவங்கி, நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட காலம் வரை உள்ள வருடங்கள் 430வருடங்களாகும்.







## பாகம் - 4

## நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது முதல், தேசம் பகுக்கப்பட்டதுவரை

இக்காலப்பகுதியானது கடந்த பாகம் முடிவடைகிற இடத்திலிருந்து மிகத் துல்லியமாக துவங்குகிறது. இது தேவன் ஒவ்வொரு காரியத்தையும் துல்லியமாக திட்டமிட்டிருப்பதை காண்பிக்கிறது. மேலும், இப்பாகமானது, எகிப்தில் இஸ்ரயேலர்களுடைய கடைசி இரவில், அதாவது பஸ்காவின் நியமனம் கடைப்பிடிக்கப்பட்டது முதல் கானான் தேசம் 11கோத்திரங்களுக்கு மத்தியில் பகுக்கப்பட்டது வரையிலான காலத்தை உள்ளடக்கியது. எகிப்திலிருந்து புறப்பட்டு சீனாய் மலை வந்து சேர்ந்ததில் 1வருடம் கழிந்திருந்தது. பின்பு பாலைவனத்தில் 39வருடங்கள் கழிந்தன.

இப்பாகத்திற்கான கணக்கீடு மூன்று படிகளில் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்படுகிறது -




| வசனங்கள் | விளக்கம் | காலம் |
|---|---|---|
| எண்ணாகமம்33:3 | "முதலாம் மாதத்தின் பதினைந்தாம் தேதியிலே அவர்கள் ராமசேசை விட்டுப் புறப்பட்டார்கள். பஸ்காவுக்கு மறுநாளிலே, எகிப்தியர் எல்லாரும் பார்க்க இஸ்ரயேல் புத்திரர் பெலத்த கையுடன் புறப்பட்டார்கள்". | |
| ,, ,, 10: 11-13 | "இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் இருபதாம் தேதியில் மேகம் சாட்சியினுடைய வாசஸ்தலத்தின்மீதிலிருந்து உயர எழும்பிற்று. அப்பொழுது இஸ்ரயேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து தங்கள் பிரயாண வரிசையாய் புறப்பட்டார்கள். மேகம் பாரான் வனாந்தரத்தில் தங்கிற்று. இப்படியே கர்த்தர் மோசேயைக் கொண்டு கட்டளையிட்டபடி முதல் பிரயாணம் பண்ணினார்கள்". எகிப்திலிருந்து சீனாய் மலைக்கு பிரயாணம் செய்த காலத்தைக் குறித்து இந்த வசனங்கள் மிக தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. | 1வருடம் + |
| எண்ணாகமம் 14:33 | "உங்கள் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்திரத்திலே திரிந்து நீங்கள் சோரம்போன பாதகத்தைச் சுமப்பார்கள்" தண்டனையாகப் பெற்ற 40 வருடங்களைப் பற்றி இந்த வசனம் குறிப்பிடுகிறது. இந்த நாற்பது வருடத்தில் ஒருவருடம் பயணம் சென்றார்கள். | 39வருடங்கள் + |
| யோசுவா 14:7, 10 | "தேசத்தை வேவு பார்க்கக்கர்த்தரின் தாசனாகிய மோசே என்னைக் காதேஸ் பர்னெயாவிலிருந்து அனுப்புகிறபோது எனக்கு நாற்பது வயதாகியிருந்தது. என் இருதயத்திலுள்ள -படியே அவருக்கு மறு செய்திகொண்டுவந்தேன்" "இப்போதும் இதோ, கர்த்தர் சொன்னபடியே என்னை உயிரோடே காத்தார்.இஸ்ரயேலர் வனாந்திரத்தில் சஞ்சரிக் -கையில், கர்த்தர் அந்த வார்த்தையை மோசேயோடேசொல்லி இப்போது நாற்பத்தைந்து வருஷமாயிற்று.இதோ, இன்று நான் எண்பத்தைந்து வயதுள்ளவன்" காலேப் கானான்தேசத்தை வேவு பார்க்கமற்ற 11 பேருடன் சென்றபோதும், அந்த தேசத்தை பங்கிட்டபோதும் உள்ள வருடங்கள் இங்கு குறிப்பிடப்படுகிறது. எண்13:6 மொத்தத்தில் இந்தகாலப்பகுதி 45வருடங்கள்.இந்த 45 வருடங்கள் சீனாய் மலையில் இஸ்ரயேல் மக்களின் பிரயாணத்திலிருந்து ஆரம்பமானது. ஆகவே "தேசம் பிரிக்கப்பட்ட காலத்தை 45-39=6 என்று கணக்கிடப்படுகிறது | 6வருடங்கள் |
| | இவ்விதமாக இந்த காலப்பகுதி மொத்தம் - | 46வருடங்கள் |

**நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது முதல் தேசம் பகுக்கப்பட்டது வரையிலான கால அளவு 46 வருடங்களாகும்.**

## பாகம்- 5

# நியாயாதிபதிகள் காலம்




இந்தக் காலப்பகுதியானது கானான் தேசம் பகுக்கப்பட்டதற்கும், இஸ்ரயேலில் முதல் ராஜாவான சவுல் அபிஷேகம் பண்ணப்பட்டதற்கும் இடைப்பட்டதாகும். இக்காலப்பகுதியில் தேவன் இஸ்ரயேலருக்கு நியாயாதிபதிகளை ஏற்படுத்தினார். முதல் நியாயாதிபதி யோசுவா (எண்ணாகமம்27 : 22,23). இந்த நியாயாதிபதிகள் இஸ்ரயேலை வழிநடத்தின தலைவர்கள் ஆவர். இவர்களில் கடைசியானவர் சாமுயேல் தீர்க்கதரிசி.

நியாயாதிபதிகளின் காலம் எவ்வளவு வருடங்கள் நீடித்திருந்தது என்ற விவரங்கள் பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில் தேவன் பரிசுத்தஆவியின் மூலம் பவுல் அப்போஸ்தலனுக்கு வெளிப்படுத்தினார் -

**அப்போஸ்தலர் 13:20**

*"பின்பு ஏறக்குறைய நானூற்றைம்பது வருஷகாலமாய் சாமுயேல் தீர்க்கதரிசி வரைக்கும் அவர்களுக்கு நியாயாதிபதிகளை ஏற்படுத்திவந்தார்"*

இங்கு "பின்பு" என்ற வார்த்தையை கவனிக்கவும். இதற்கு முந்தைய வசனத்தில் குறிப்பிடுவது போல, இக்காலப்பகுதி கணக்கிடப்படுவது தேசம் பகுக்கப்படுவதில் துவங்குவதை உறுதிசெய்கிறது.

**அப்போஸ்தலர் 13:19**

*"கானான் தேசத்தில் ஏழு ஜாதிகளைஅழித்து, அவர்களுடைய தேசத்தை இவர்களுக்குச் சுதந்திரமாகப் பங்கிட்டுக் கொடுத்து.."*

இவ்வசனத்தில் நியாயாதிபதிகளின் காலம் 450 வருடங்கள் என்று தெளிவாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், ஏறக்குறைய என்ற வார்த்தையானது, இது ஒரு துல்லியமான கணக்கீடு அல்ல என்பது போன்ற கருத்திற்கு காரணமாகிறது.
ஆனால் தேவன் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற 450 வருடகாலமானது உண்மையிலேயே நியாயாதிபதிகளின் மிகச் சரியான காலமாகும். இதை எவ்வாறு நிரூபிக்கமுடியும்?

ஏனென்றால், நியாயாதிபதிகளின் காலப்பகுதிக்கு முன்னும் பின்னும் காலக்கணக்கின் அடுத்த பாகம் இணைந்திருக்கிறது. முதல் நியாயாதிபதியாகிய யோசுவா மோசே மூலம் நியாயாதிபதியாக கானானுக்குள் நுழையும் முன்னரே அபிஷேகம் பண்ணப்பட்டார். அதே சமயம் (யோசுவா 14:10ல் காண்கிறபடி) தேசம் பகுக்கப்படுகையில், அவரே நியாயாதிபதியாக இருந்தார். அது மாத்திரமல்ல, கடைசி நியாயாதிபதியாகிய சாமுயேல் தன்னுடைய ஸ்தானத்தில் , சவுல் இஸ்ரயேலின் இராஜாவாக தன் ஆளுகையைத் துவங்கினபின்பு தன்

மரணம் வரைக்கும் தொடர்ந்தார். ஆகையால்

**நியாயாதிபதிகளின் காலம் பின்வருமாறு காண்பிக்கப்படுகிறது.**

**யோர்தான் நதியைக் கடந்து செல்லுதல்**

⇩

**தேசம் பகுக்கப்பட்ட காலம் (6 வருடங்கள்)**

**--இடைவெளி-- 450 வருடங்கள்**

**(அப்போஸ்தலர் 13:20ல் கொடுக்கப்பட்டுள்ள 450வருட காலம் "ஏறக்குறைய")**

**சவுல் இராஜாவாக அபிஷேகம் பண்ணப்படுதல்**

⇩

**சவுல் இராஜாவாக ஆளுகை செய்த காலம் (40 வருடங்கள்)**

⇩

**சாமுயேலின் மரணம்**

இங்கு புள்ளியிட்ட கோடுகள் நியாயாதிபதிகளின் முழுமையான காலப்பகுதியை காண்பிக்கிறது.

இவ்விதமாக தேசம் பகுக்கப்பட்ட முதல் சவுலின் ஆளுகை துவங்குவதற்கு முன்பு, சாமுயேல் நியாயம் விசாரித்த காலம் வரையிலான காலப்பகுதியை தேவன், "பின்பு" (அப்போஸ்தலர் 13:20) என்பதின்மூலம் வெளிப்படுத்துகிறார். ஆனால் நாம் சற்று முன்பு பார்த்தபடி, இது நியாயாதிபதிகளுடைய துல்லியமான காலம் அல்ல. இதைக் காட்டிலும் நீண்ட காலப்பகுதியை உடையது. ஆனால் ஏறக்குறைய என்ற பொருத்தமான வார்த்தையைப் பயன்படுத்தி, பின்னிப்பிணைந்த காலப்பகுதியைவெட்டி, நமக்குத் தேவையான துல்லியமான காலப்பகுதியைத் தந்துள்ளார்.

**வேதாகம காலக்கணக்கிற்கு தேவைப்படுகிற நியாயாதிபதிகளின் காலங்கள்450 வருடங்கள் ஆகும்.**

## பாகம்- 6

## இராஜாக்களின் காலம்

இது முதலாவது இராஜாவாகிய சவுல் துவங்கி, யூதாவின் கடைசிஇராஜாவாகிய சிதேக்கியாவின் வீழ்ச்சி வரையிலான இராஜாக்களின்



| 'King's Calendar' | | Judaica |
|---|---|---|
| | King Saul | |
| 1039 BCE | Made Prince | |
| 1038 BCE | Made King | 1029 BCE |
| 1010 BCE | Died | 1005 BCE |
| | | |
| | King David | |
| 1010 BCE | Becomes King August 7th | 1005 BCE |
| 974 BCE | Died | 965 BCE |
| | | |
| | King Solomon | |
| 974 BCE | Becomes King July 10th. | 965 BCE |
| 936 BCE | Dies | 928 BCE |

காலப்பகுதியாகும். அந்த இராஜாக்களின் பெயர்களையும், அவர்கள் ஆளுகை செய்த வருடங்களையும் வரிசையாக நாம் காண்போம்-

| | | |
|---|---|---|
| *அப்போஸ்தலர் 13:21* | *சவுல்* | *40 வருடங்கள்* |
| *1நாளாகமம்29:27* | *தாவீது* | *40 வருடங்கள்* |
| *2நாளாகமம் 9:30* | *சாலொமோன்* | *40 வருடங்கள்* |

சாலொமோன் இராஜாவின் மரணத்திற்குப் பின்பு, இஸ்ரயேல் தேசம் இரண்டு பாகமாகப் பிரிந்தது. இந்தக் காலக்கணக்கில் மீதம் உள்ளவைகளைஅறிந்துகொள்ள தேவனுடைய பார்வை தங்கியிருந்த யூதாவின் இராஜாக்களிலிருந்து நாம் எடுப்போம்.

ஏனென்றால் யூதாவிலிருந்தே மேசியா எனப்பட்ட - **"சமாதான கர்த்தர்"** வருவார் என்று வாசிக்கிறோம்(ஆதியாகமம்49:10).

இங்கு கீழே காண்கிறபடி யூத இராஜாக்களின் பட்டியல் வரிசை சாலொமோனுடையகுமாரனாகிய ரெகோபேயாம் துவங்கி அவர்கள்ஆளுகையின் வருடங்களும் கொடுக்கப்பட்டுள்ளது.

| வசனங்கள் | இராஜாக்களின் பெயர்கள் | அரசாண்ட காலம் |
|---|---|---|
| *2நாளாகமம்12:13* | *ரெகோபெயாம்* | *17 வருடங்கள்* |
| *2நாளாகமம் 13:2* | *அபியா* | *3 வருடங்கள்* |
| *2நாளாகமம்16:13* | *ஆசா* | *41 வருடங்கள்* |
| *2இராஜாக்கள்22:42* | *யோசபாத்* | *25 வருடங்கள்* |
| *2இராஜாக்கள் 8:17* | *யோராம்* | *8 வருடங்கள்* |
| *2இராஜாக்கள்8:26* | *அகசியா* | *1வருடம்* |
| *2இராஜாக்கள் 11:3* | *அத்தாலியாள்* | *6 வருடங்கள்* |
| *2இராஜாக்கள்12:1* | *யோவாஸ்* | *40 வருடங்கள்* |
| *2இராஜாக்கள் 14:2* | *அமத்சியா* | *29 வருடங்கள்* |
| *2இராஜாக்கள் 15:2* | *அசரியா* | *52 வருடங்கள்* |
| *2இராஜாக்கள்15:33* | *யோதாம்* | *16 வருடங்கள்* |
| *2இராஜாக்கள்16:2* | *ஆகாஸ்* | *16 வருடங்கள்* |
| *2இராஜாக்கள்18:2* | *எசேக்கியா* | *29 வருடங்கள்* |
| *2இராஜாக்கள்21:1* | *மனாசே* | *55 வருடங்கள்* |
| *2இராஜாக்கள்21:19* | *ஆமான்* | *2 வருடங்கள்* |
| *2இராஜாக்கள்22:1* | *யோசியா* | *31 வருடங்கள்* |
| *2இராஜாக்கள்23:31* | *யோவகாஸ்* | *1/4 வருடம்(3மாதம்)* |
| *2இராஜாக்கள்23:36* | *யோயாகீம்* | *11 வருடங்கள்* |
| *2இராஜாக்கள் 24:8* | *யோயாகீன்* | *1/4 வருடம்(3மாதம்)* |
| *2இராஜாக்கள்24:18* | *சிதேக்கியா* | *11 வருடங்கள்* |

***இவ்விதமாக இராஜாக்களின் காலம் = 513 வருடங்கள்***

## பாகம் - 7

## இராஜாக்களின் கால முடிவு துவங்கி கிபி 1ம் வருடம் வரை

இந்த கடைசி பாகமானது, யூதாவின் கடைசி இராஜாவாகிய சிதேக்கியாவின் வீழ்ச்சியில் துவங்கி கிபி 1ம் ஆண்டு வரைக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது.வேதாகம காலக்கணக்கில் உள்ள இந்த கடைசி பாகத்தை, யூதாவின் கடைசி இராஜாவாகிய சிதேக்கியாவின் வீழ்ச்சிக்குப் பிறகு சம்பவித்தவைகளை வாசித்து அறிவோம்-

2நாளாகமம்36:20,21 "பட்டயத்திற்குத் தப்பின மீதியானவர்களை அவன் பாபிலோனுக்குச் சிறைபிடித்துப் போனான்.... தேசம் தன்னுடைய ஓய்வு வருஷங்களை இரம்மியமாய் அநுபவித்துத் தீருமட்டும் அது எழுபது வருஷம் முடியுமட்டும் ஓய்ந்திருந்தது"

பாபிலோனில் இஸ்ரயேலர்கள் சிறைப்பிடிக்கப்பட்டிருந்தகாலம் 70 வருடங்களாகும்.
அதற்குப் பின்பு பெர்சியாவின் இராஜாவாகிய கோரேஸ் இராஜா ஆளுகைக்கு வந்த முதலாம் வருடத்தில் ஜனங்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

**2நாளாகமம் 36:22,23**

*"எரேமியாவின்வாயினாலே கர்த்தர் சொன்னவார்த்தை நிறைவேறும்படி பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்திலே கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினாலே, அவன், பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின்ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே நமக்கு ஆலயத்தைக் கட்டுவிக்கும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்"*

கோரேஸ்ராஜா ஆளுகைக்கு வந்த முதலாம் வருடம், உலக சரித்திரத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்கிறவாறு, கிமு 536 என அனைவரும் அறிவோம்.

ஆம். தேவன் நம்மை தம்முடைய கரம்கொண்டு அவருடைய வார்த்தைகளின் மூலம், உலக சரித்திரத்தில் நம்பத் தகுந்த காலக்கணக்கின் நிச்சயமான வருடத்தை நாம் அறியும்படி வழிநடத்தியிருக்கிறார்.

இது, ஒருவர் தான் அறியாத இடத்திற்கு நம்மை வழிநடத்த கேட்கும்போது, அவர் அறிந்திருக்கிற இடம் மட்டும் வழிநடத்தி, பின்பு அறிந்திருக்கிற பாதையில் தொடர்ந்து முன்னேறிச்செல்ல முடியும் என்பதால் அவர்போக்கில் செல்லும்படி விட்டுவிடுகிறார். இன்று நமக்கு தேவன் அதுபோன்றே செய்திருக்கிறார்.

இவ்விதமாக, வேதாகம காலக்கணக்கில் கிபி 1 வரையிலான கடைசிபாகத்தின் கால அளவு 70+ 536 = 606 வருடங்களாகும்.

முடிவாக, ஆதாமின் சிருஷ்டிப்பிலிருந்து கிபி 1ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி வரையிலான வருடங்களின் கூட்டுத்தொகை பின்வருமாறு உள்ளது -

## 1656 + 427+ 430 + 46 + 450 + 513 + 606 = 4128 வருடங்கள்

இவ்விதமாக ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட மிகசரியானஆண்டு கிமு 4128என்று அறிகிறோம்.

➡நாம் கவனிக்கவேண்டிய மற்றொரு காரியம், கிமு என்ற காலகட்டத்தில் கடைசி வருடமாகிய கிமு 1 - டிசம்பர் 31ம் தேதிக்கு மறுநாள் அதாவது கிபி 1 - ஜனவரி 1ம் தேதி ஆகும்.

இங்கு கிமு மற்றும் கிபி ஆகிய இரு காலப்பகுதியைப் பிரிக்கிற பூஜ்ஜிய வருடம் என்பது இல்லை என்பதை நாம் கவனிக்கவேண்டும். இது பின்வருமாறு காண்பிக்கப்படுகிறது :

⇦--------- **கிமு** ⇦------ ----------⇨**கிபி**---------⇨

5 4 3 2 1 1 2 3 4 5

இவ்விதமாக "கர்த்தருடைய புஸ்தகமாகிய" வேதாகமத்தில், தொடர்பு அற்றுப்போகாத 50 வசனங்கள் மூலமாக, ஆதாமினுடைய சிருஷ்டிப்பிலிருந்து கிபி 1ம்ஆண்டுவரை கடந்துவந்த கால அளவை நாம் கண்டறிந்தோம்.

ஆம். தேவன் ஏசாயா34:16ல் வாக்களித்தபடி, அவருடைய வார்த்தைகளிலிருந்து நமக்கு இந்த துல்லியமான காலக்கணக்கைக் காண்பித்துள்ளார்.

***ஏசாயா 34:16***

***"கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள். இவைகளில் ஒன்றும் குறையாது. இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது. அவருடைய வாய் இதைச் சொல்லிற்று. அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்"***

இன்று, தேவனுடைய வார்த்தையானது , மனிதனுக்காக தேவன் ஏற்படுத்தியுள்ள கால கடிகாரத்தை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறது.

**தேவ கிருபை நம் அனைவரோடும்கூடஇருப்பதாக ஆமென்.**

